

★ 35 படுக்கைகள் ★ உயர்தர சிகிச்சை

# சென்னை க்ரீம்ஸ் சாலை அப்போலோவில் ஆயுர்வேத மருத்துவமனை திறப்பு

**சென்னை, நவ 4–**

**சென்னை கிரீம்ஸ் சாலை அப்போலோவில் 35 படுக்கை களுடன் கூடிய 'ஆயுர்வைத்' என்ற பிரத்யேக ஆயுர்வேத மருத்துவமனையை அப்போலோ குழுமம் தொடங்கியுள்ளது. இதற்கான தொடக்க நிகழ்வில் குழுமத் தலைவர் டாக்டர் பிரதாப் ரெட்டி, துணைத் தலைவர் பிரீத்தா ரெட்டி, ஆயுர்வைத் மருத்துவமனை நிறுவனர் ராஜீவ் வாசுதேவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.**

இது குறித்து டாக்டர் பிரதாப் சி. ரெட்டி பேசுகையில், 'அனைத்து தரப்பு மக்களுக்கும் ஒருங்கிணைந்த மருத்துவ சேவைகள் கிடைக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். ஆயுர்வேதம் மனித குலத்துக்கு கிடைக்கப்பெற்ற வரங்களில் ஒன்று. அந்த முறையிலான சிகிச்சைகளை ஆக்கபூர்வமாகவும், துல்லியமாகவும், உயர் தரத்திலும் வழங்க முடிவு செய்து 35 படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனையை தொடங்கியுள்ளோம்' என்றார்.

இங்கு, எலும்பியல், நரம்பியல், வளர்ச்சிதை மாற்றம், குழந்தைகள் நலன், மகளிர் நலன், வளர்ச்சிக் குறைபாடுகள், முதியோர் நலன், பெருங்குடல் பாதிப்புகள், சுவாச பிரச்சனைகள், நாள்பட்ட காயங்கள், விளையாட்டு காயங்களுக்கு ஆயுர்வேத சிகிச்சைகளும், சிறு அளவிலான துணை நிலை அறுவை சிகிச்சைகளும் அளிக்கப்பட உள்ளன'' என்றும் தெரிவித்தார்.

அப்போலோ ஆயுர்வைட் மூலம், மருத்துவ ரீதியாக நிர்வகிக்கப்பட்ட, ஆதார– அடிப்படையிலான ஆயுர்வேதத்தை நவீன மருத்துவத்துடன் இணைக்கின்றோம். இது குணமடைதலை மேம்படுத்துகிறது, மன–உடல் சமநிலையை மீட்டெடுக்கிறது, மற்றும் வாழ்நாள் முழுவதுமான நல்வாழ்வை ஊக்குவிக்கிறது என்றார்.

அனைத்து நான்கு தென்னிந்திய மாநிலங்கள், புதுடெல்லி, அல்மோரா ஆகிய பகுதிகளில் ஒரு வலுவான இருப்பைக் கொண்டுள்ள அப்போலோ ஆயுர்வைட் ஹாஸ்பிடல்ஸ் , மேற்கு மற்றும் கிழக்கு இந்தியாவில் விரைவில் தொடங்கவிருக்கும் கிளைகளுடன், துல்லியமான ஆயுர்வேதம் மற்றும் முழுமையான குணப்படுத்துதலுக்கான இந்தியாவின் மிக முன்னணி வலையமைப்பைத் தொடர்ந்து அமைத்து வருகின்றன."என்றும் அவர் கூறினார்.

நிர்வாக இயக்குநர் ராஜீவ் வாசுதேவனும் மருத்துவமனையின் சிறப்பை விளக்கினார்.

# கருணை அடிப்படையில் 2 பேருக்கு பணி நியமன ஆணை: திருப்பத்தூர் கலெக்டர் சிவசௌந்திரவல்லி வழங்கினார்

திருப்பத்தூர், நவ. 4–

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கருணை அடிப்படையில் 3 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை கலெக்டர் க.சிவசௌந்திரவல்லி வழங்கினார்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், எம். ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ், தேன்மொழி என்பவர் ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட வக்கனம்பட்டி அரசினர் மேல்நிலைப்பள்ளியில் அமைப்பாளராக பணியாற்றி பணி காலத்தில் காலமானார், அப்பணியாளரின் வாரிசுதாரரான பவித்ரா என்பவருக்கு குருமன்ஸ் காலனி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் அமைப்பாளர் பணிக்கான பணி நியமன ஆணையும்,



விமலாகுமாரி என்பவர் மாதனூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட கன்னடிகுப்பம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் அமைப்பாளராக பணியாற்றி பணி காலத்தில் காலமானார், அப்பணியாளரின் வாரிசுதாரரான பிரியதர்ஷினி என்பவருக்கு கன்னடிகுப்பம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் அமைப்பாளர் பணிக்கான பணி நியமன ஆணையும்,

அதனைத்தொடர்ந்து, திருப்பத்தூர் வட்டம், லட்சுமி நகர் ஆசிரியர் நகர், பாச்சல் கிராமத்தை சேர்ந்த சுகேஷ் என்பவர் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு, இறந்ததைத் தொடர்ந்து, அவரது சகோதரி ச.ஸ்வாதி என்பவருக்கு வன்கொடுமை தடுப்புச்சட்டம் திருத்த விதிகள் 2016 ன் படி பள்ளிக்கல்வித்துறையில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணிக்கான பணி நியமன ஆணையும் என மொத்தம் 3 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை கலெக்டர் க.சிவசௌந்திரவல்லி வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் கதிர்சங்கர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) ம.தண்டபாணி, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

குரு ஐஸ்வர்யா பாலபாரதியின் 'ஜெராக்ஸ்' சிஷ்யை

# "ஜெட் லாக்" பயத்தை விரட்டி அடித்தது "ஜெட் வேக" ஸ்ரீநிதி சேஷாத்ரி நாட்டியம்!

50 ஆண்டு அனுபவசாலி குரு ஷோபனா பால்சந்தர் பெருமிதம்

**கோ**வில் சன்னிதானத்தில் லட்டு வினியோகிக்கும் காட்சியில் (படம் : குணா, இயக்கம் : சந்தான பாரதி, நடிப்பு : கமல், ஆண்டு: 1991) நாம் பார்த்திருந்த வெள்ளித்திரை நாயகி ரோஷினி எப்படி சொர்ண விக்கிரகமாய் கண்களில் நின்றாரோ... அதற்கு ஒரு இம்மியளவும் குறையாமல் அதே மாதிரி சொர்ண விக்கிரகமாய் ஸ்ரீநிதி சேஷாத்திரி, வாணி மஹால் மேடையில் (20 வயது இளம் நாட்டியத் தாரகை).



ஐஸ்வர்யா பாலபாரதி தலைமையில் வெற்றிகரமாக இயங்கி வரும் நாட்டியத் தாரா டான்ஸ் கம்பெனியின் மாணவி ஸ்ரீநிதி . இவரது அரங்கேற்றம் தரங்கணி நாட்டிய பள்ளியின் நிறுவனர் ஷோபனா பால்ச்சந்தர் தலைமையில் நடைபெற்றது.

"அமெரிக்காவிலிருந்து நேற்றுதான் சென்னை திரும்பினேன், "ஜெட் லாக்"கில் எங்கே கண் அசந்து விடுவேனோ என்று பயந்தேன். ஆனால் அதற்கு நேர்மாறாக ஸ்ரீநிதியின் நாட்டியம் "ஜெட்" வேகத்தில் ஓர் நடனம், ''ஜெட் லாக்கைத்' கின் துரத்தி அடித்து இருக்கிறது..." என்று

**ஐஸ்வர்யா பாலபாரதி: தமிழ் சினிமா இசையமைப்பாளர் பாலபாரதியின் மகள். தாய் உஷா– இசைப் பேராசிரியை. பிரபல நாட்டியக் கலைஞர் ஷீலா உன்னிகிருஷ்ணனின் பெயர் சொல்லும் மூத்த சிஷ்யர்களில் ஒருவர் ஐஸ்வர்யா. நாட்டியத் துறையில் 27 ஆண்டுகள் அனுபவம். லண்டனில் 2016ல் நாட்டியத் தாரா பள்ளியை துவக்கியவர். நாட்டியத்தில் எம் ஏ பட்டதாரி. மனம் உடல் உணர்ச்சி ரீதியான சிக்கலை தீர்க்க உடல் இயக்கத்தை பயன்படுத்தும் ஒரு மருத்துவ நிபுணர், அதாவது மூவ்மென்ட் தெரபிஸ்ட்.**

**'நாட்டியம் பொழுதுபோக்கு மட்டுமல்ல, அதையும் ஒரு வாழ்க்கை தொழில் ஆக்கலாம்' என்று சொல்லி உந்து விசையாகி இருக்கும் அடுத்த தலைமுறையின் குரு.**

எடுத்த எடுப்பிலேயே குறிப்பிட்டு வாழ்த்தினார் ஷோபனா பால் சந்தர்.

"பட்.. பட்.. பட பட பட பட் பட்..." என்று வெடிக்கும் தீபாவளி பட்டாசே தான் ஸ்ரீநிதி. ஆனந்த நர்த்தனத்தில் (ஊத்துக்காடு வேங்கடகவி), துவங்கி கடைசியில் முடித்த தில்லானா பேரணி நாட்டியம் (மதுரை என் கிருஷ்ணன்) வரை கொஞ்சமும் தொய்வே இல்லாமல் பரபர வென்று ஆடி முடித்தது இருக்கிறதே, அது கண்டு அசந்து போனேன்,.." என்று மனம் திறந்து பாராட்டியது குரு ஐஸ்வர்யாவின் உழைப்புக்கு கிடைத்திருக்கும் வெற்றி!

பானை மீது நடனம்: மெலட்டூர் பாணியில் ஸ்ரீநிதியின் நிருத்தம் அருமை. சிஷ்யையின் வெற்றிக்கு ஐஸ்வர்யாவின் பெயரை உச்சரித்தாக வேண்டும் என்று ஆனந்தமாய் சொன்னார்.

ஏ.வி.ஆர். ரோஷினி (முதல் முறையாக இனிஷியலை இணைத்துக் கொண்டிருக்கிறார்) குரலில் இறைவணக்கம் முடிந்தது. ஆனந்த நர்த்தனத்தில், மேடையின் வலப்பக்கத்திலிருந்து வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு கணக்காய் தோன்றினாள். சுத்தானந்த பாரதியின் ஆனந்த நடனம் ஆடினாள்.., மதுரை ஆர் முரளிதரனின் "கானம் இசைத்து நின்றாயோ...", மகாகவி சுப்பிரமணிய பாரதியின் "சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா...", பாபநாசம் சிவனின் "சிங்கார வேலன் வந்தான்...", நிறைவாக தில்லானா வரை 6 சாகித்திய கர்த்தாக்களின் 6 உருப்படிகள். (ஆறிலும் ஸ்ரீநிதிக்கு ஏறுமுகம்.)

ஐஸ்வர்யாவின் நட்டுவாங்கம், ஏவிஆர் ரோஷினியின் வாய்ப்பாட்டு, சர்வேஷ் கார்த்திக்கின் மிருதங்கம், டிவி சுகன்யாவின் வயலின், முடிகொண்டான் ரமேஷின் வீணை, பாலக்காடு ஸ்ரீ ராமின் புல்லாங்குழல்: இப்படி ஆறு மூத்த கலைஞர்களின் அனுசரணை வாசிப்பில் அறுசுவை ருசி!

பகடை உருட்டி தர்மனை வீழ்த்தும் சகுனியா, தலைமுடியை பிடித்துத் தரதரவென்று இழுத்து வந்து சபையில் தள்ளும் துச்சாதனனா, தன் மானம் காக்க நெக்குருகி "கண்ணா... கண்ணா" என்று அபயக் குரல் எழுப்பும் திரௌபதியா ... கண்ணிமைக்கும் நேரத்தில் தோன்றி திரௌபதி மானம் காக்கும் ஆபத்பாந்தவன் ஸ்ரீ கிருஷ்ணனா...?

ஸ்ரீநிதி காட்டிய பாவங்களில் யாரை மறக்க முடியும்? இந்த நிமிடம் வரை மகாபாரத இதிகாச கதாபாத்திரங்கள் கண்களில் நிழலாடுகிறார்கள் என்றால்... இதில் சிஷ்யையின் கற்பூர புத்தியை கௌரவிப்பதா... இல்லை குருவின் போதனை உத்தியை புகழ்ந்துரைப்பதா.. என்று கேள்வி எழுப்பி வாழ்த்தினார் மக்கள் குரல் வீ ராம்ஜீ.

**சென்னை கோடம்பாக்கம் மீனாட்சி சுந்தரராஜன் என்ஜினியரிங் கல்லூரியில் செயற்கை நுண்ணறிவு தரவு அறிவியலில் இறுதி ஆண்டு மாணவி ஸ்ரீநிதி. படிப்பிலும் புலி. சென்னை சொல்வேந்தர் மன்றத்தின் (டோஸ்டர் கிளப) செயலாளர் பணியாற்றியவர். கல்லூரி பிரின்ஸ்பல் டாக்டர் சரவணன், துறைத் தலைவிகள், பேராசிரியர் மற்றும் சக மாணவ மாணவிகள் நேரில் வந்து பரிசளித்து ஸ்ரீ நிதியை வாழ்த்தினார்கள்.**

திரௌபதியை துகிலுரியும் காட்சியில் நின்ற இடத்தில் நின்றபடி பம்பரச் சுழற்சியில் திரௌபதி தடால் என்று தரையில் சாயும் போது, ஸ்ரீநிதி தான் சுற்றினாரா இல்லை அது சுழல் மேடையா...? என்று சந்தேகம். பானை மீது பேரணி நடனம்: இவ்விரண்டும் ஸ்ரீநிதியின் திறமைக்கு ஒரு பானை சோற்றுக்கு இரு சோறு பதம் (பாதம்).

தாரணி ராஜு, ஸ்ரேயா–கனிஷ்கா ரவி (சகோதரிகள்) கொஞ்சும் தமிழில் மூவரின் கெஞ்சும் குரலின் ஏற்ற இறக்கம் வர்ணனை, அகம் மகிழும். ஒப்பனை கீர்த்தனா சுந்தர், ஆடை ரமேஷ், யோகா ஆனந்த் நந்தினி.

கவிநயா, அக்ஷரா, வஷிந்தா, சாய் ஸ்மிருத்தி, விபா, பிரகதி, சுருதி, தேவி – பூங்கொத்துடன் மாணவிகள் வரவேற்பு சிறப்பு விருந்தினர்களுக்கு நெகிழ்ச்சி.

**ஸ்ரீநிதியை உச்சி முகரலாம், கர்வம் அடையலாம் ஐஸ்வர்யா பாரதி. (பாரதியாரின் பாட்டு வரிகளில் வந்ததைப் போல) இன்னும் 3 ஆண்டுகளில் சென்னை இசை நாட்டிய விழாக்களில் தவறாமல் இடம் பிடிக்கப் போகும் இரு வல்லவர்கள். முன்கூட்டியே வாழ்த்துகள்!**

**வீ. ராம்ஜீ**

**BEFORE THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT SHOLINGANALLUR**
**O.S.No. 920 OF 2024**

1.S.Thanapaul (Died)
2. C.BABY @BABY THANGAM
W/o.S.Thanapaul
Old No.22.New No.33, 1st Cross Street,
Gangai Nagar 5th Main Road,
Velachery, Chennai-600 042 Plainitff

Vs

Mrs. Puspha, W/o.Late Chandran,
No.123/3, CS Colony, (Ayswarya Colony)
Indira Nagar, Adyar, Chennai-600 020
Defendant

Please take notice that my client S.Thanapaul has filed suit for permanent injunction as against you, she had taken application under order VI Rule 17 of CPC in I.A.No.1 of 2025 in O.S.No.920 of 2024 on the file of Hon'ble District Munsif Cum Judicial Magistrate at Sholinganallur was pleased to order paper publication to you returnable by 25.11.2025. Please be present before the above said court at 10.30 A.M. Without fail, failing which the above case will be heard and decided in your absence and further orders will be passed

**G.V.SRIDHARAN**
Advocate

**BEFORE THE STATE CONSUMER DISPUTE REDRESSAL COMMISSION AT CHENNAI**
**F.A. No. 750 of 2025**
**Against**
**C.C. No.282 of 2022**
(On the file of the District Consumer Dispute Redressal Commission, South Chennai)

E. KALAIARASI, W/o. H. Manoj Kumar,
1271, 19th Main Road, Dr. Ambedkar Nagar,
Velachery, Chennai – 600 042.
...Appellant/Complainant

-Vs-

1. FPL Vehicles Private Limited,
Rep. by its Managing Director,
Registered Office at:
No.824/2, Anna Salai,
Nandanam, Chennai – 600 036.
2.FPL Vehicles Private Limited,
Rep. by its Managing Director,
Show Room at:
No.4, Perungudi Industrial Estate,
Perungudi, Old Mahabalipuram Road,
Chennai – 600 097.
3.FPL Vehicle Private Limited,
Rep. by its Managing Director,
Workshop at:
Developed Plot No, 5,
South Phase Thiru-Vi-Ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
4.MG Motor India Private Limited,
Rep. by its Managing Director,
10th Floor, 32nd Avenue,
Saini Khera Village, Sector 15,
Gurugram, Haryana – 122 022.
...Respondents/Opposite Parties

**NOTICE**

WHEREAS the above-named Appellant has filed the above-mentioned first appeal in F.A.No.750 of 2025 against yourselves seeking to setaside the order passed in C.C.No.282 of 2022 by the Learned District Consumer Dispute Redressal Commission, South Chennai. Wherein the Hon'ble State Consumer Dispute Redressal Commission at Chennai on 15.10.2025 was pleased to order notice to the 3rd respondent by way of paper publication returnable by 10.11.2025.

Kindly make it convenient to appear before the Hon'ble Commission on 10.11.2025 at 10.30 A.M, failing which the matter will be decided in your absence.

**S. MUGESH**
Counsel for Appellant/Complainant


SUNDARAM FINANCE
Enduring values. New age thinking.

**30 செப்டம்பர் 2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்**

(₹ கோடிகளில்)

| விவரங்கள் | தனித்தது | | | | | | ஒருங்கிணைக்கப்பட்டது | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | முடிவடைந்த காலாண்டு 30.09.2025 | முடிவடைந்த காலாண்டு 30.06.2025 | முடிவடைந்த காலாண்டு 30.09.2024 | முடிவடைந்த அரையாண்டு 30.09.2025 | முடிவடைந்த அரையாண்டு 30.09.2024 | முடிவடைந்த ஆண்டு 31.03.2025 | முடிவடைந்த காலாண்டு 30.09.2025 | முடிவடைந்த காலாண்டு 30.06.2025 | முடிவடைந்த காலாண்டு 30.09.2024 | முடிவடைந்த அரையாண்டு 30.09.2025 | முடிவடைந்த அரையாண்டு 30.09.2024 | முடிவடைந்த ஆண்டு 31.03.2025 |
| இயக்கங்களின் மூலம் மொத்த வருமானம் (நிகரம்) | 1,813.69 | 1,883.23 | 1,601.17 | 3,696.92 | 3,068.99 | 6,520.44 | 2,385.64 | 2,348.93 | 2,084.67 | 4,734.57 | 4,036.27 | 8,485.63 |
| நிகர இலாபம் / (நஷ்டம்) நடப்புக் காலத்திற்கான (வரிக்கு முன், தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகள்) | 514.62 | 559.69 | 465.20 | 1,074.31 | 867.36 | 2,061.68 | 650.14 | 575.32 | 557.30 | 1,225.46 | 1,081.85 | 2,447.39 |
| நிகர இலாபம் / (நஷ்டம்) நடப்புக் காலத்திற்கான வரிக்கு முன், (தனிப்பட்ட வகைகளுக்குப் பின் மற்றும் / அல்லது அசாதாரண வகைகள்) | 514.62 | 559.69 | 465.20 | 1,074.31 | 867.36 | 2,061.68 | 650.14 | 575.32 | 557.30 | 1,225.46 | 1,081.85 | 2,447.39 |
| நிகர இலாபம் / (நஷ்டம்) நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின், (தனிப்பட்ட வகைகளுக்குப் பின் மற்றும் / அல்லது அசாதாரண வகைகள்) | 394.20 | 428.72 | 340.09 | 822.92 | 647.74 | 1,542.65 | 488.12 | 475.21 | 436.15 | 963.33 | 871.00 | 1,879.44 |
| கம்பெனி உரிமையாளருக்கு காரணமானது | 394.20 | 428.72 | 340.09 | 822.92 | 647.74 | 1,542.65 | 488.12 | 475.21 | 436.15 | 963.33 | 871.00 | 1,879.44 |
| மற்ற உரிமையாளருக்கானது | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| நடப்புக் காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [நடப்புக் காலத்திற்கான (வரிக்குப் பின்) உள்ளடக்கிய இலாபம் / (நஷ்டம்) மற்றும் (வரிக்குப் பின்) இதர விரிவான வருமானம் (வரிக்குப் பின்)] | 723.72 | 1,272.80 | 747.90 | 1,996.52 | 1,289.58 | 1,994.12 | 796.68 | 1,364.54 | 926.31 | 2,161.22 | 1,604.92 | 2,442.88 |
| கம்பெனி உரிமையாளருக்கு காரணமானது | 723.72 | 1,272.80 | 747.90 | 1,996.52 | 1,289.58 | 1,994.12 | 796.68 | 1,364.54 | 926.31 | 2,161.22 | 1,604.92 | 2,442.88 |
| மற்ற உரிமையாளருக்கானது | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் | 111.10 | 111.10 | 111.10 | 111.10 | 111.10 | 111.10 | 110.21 | 110.21 | 110.21 | 110.21 | 110.21 | 110.21 |
| ரிசர்வுகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக) | 12,793.81 | 12,302.01 | 10,475.80 | 12,793.81 | 10,475.80 | 11,028.00 | 15,018.98 | 14,452.38 | 12,399.87 | 15,018.98 | 12,399.87 | 13,086.62 |
| பங்கு பிரீமியம் கணக்கு | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil |
| நிகர மதிப்பு | 12,904.91 | 12,413.11 | 10,586.90 | 12,904.91 | 10,586.90 | 11,139.10 | 15,129.19 | 14,562.59 | 12,510.08 | 15,129.19 | 12,510.08 | 13,196.83 |
| செலுத்தப்பட்ட கடன் மூலதனம் / கடன் நிலுவை | 51,657.12 | 48,807.07 | 43,746.20 | 51,657.12 | 43,746.20 | 47,359.12 | 65,920.37 | 63,241.98 | 56,331.35 | 65,920.37 | 56,331.35 | 61,149.70 |
| நிலுவையிலுள்ள மீட்டெடுக்கக் கூடிய முன்னுரிமை பங்குகள் | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil |
| கடன் பங்கு விகிதம் | 4.00 | 3.93 | 4.13 | 4.00 | 4.13 | 4.25 | 4.36 | 4.34 | 4.50 | 4.36 | 4.50 | 4.63 |
| அடிப்படை மற்றும் டைல்யூட்டட் EPS (அடிப்படை & நீர்த்தது) (முக மதிப்பு ₹10/-) (காலாண்டிற்கு ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) (on PAT) | 35.48 | 38.59 | 30.61 | 74.07 | 58.30 | 138.85 | 44.29 | 43.12 | 39.57 | 87.41 | 79.03 | 170.53 |
| மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | 15.00 | 15.00 | 15.00 | 15.00 | 15.00 | 15.00 |
| மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு | பொருந்தாது | | | | | | | | | | | |
| கடன் சேவை கவரேஜ் விகிதம் | | | | | | | | | | | | |
| வட்டி சேவை கவரேஜ் விகிதம் | | | | | | | | | | | | |

குறிப்புகள் :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகளின், விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு / ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். காலாண்டு / ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் இணையதளம் (URL : www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.sundaramfinance.in) ஆகியவற்றில் கிடைக்கும்.
2. செப்டம்பர் 30, 2025ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவினரால் நவம்பர் 1, 2025 அன்று மதிப்பாய்வு செய்யப்பட்டு, நவம்பர் 3, 2025 அன்று சென்னையில் நடைபெற்ற இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
3. முந்தைய காலத்திற்கான தொகைகள் நடப்புக் காலத்தின் தேவைக்கேற்றவாறு மறுவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
4. செப்டெம்பர் 30, 2025ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான நிதிநிலை முடிவுகள் கூட்டு சட்டமுறை தணிக்கையாளர்களால் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வு செய்யப்பட்டன.

சென்னை
03.11.2025

போர்டின் உத்தரவுப்படி
ராஜீவ் C லோச்சன்
நிர்வாக இயக்குநர்

**சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட்**
CIN:L65191TN1954PLC002429
பதிவு பெற்ற அலுவலகம் : 21, பட்டுல்லாஸ் சாலை, சென்னை - 600 002.
Tel: 044 2852 1181, Fax: 044 2855 0290
Email: investorservices@sundaramfinance.in | www.sundaramfinance.in